*IN THE COURT OF THE SUB JUDGE, MELUR*
*DEPOSITION OF WITNESS*
*OS 205/2022*

| | | |
|---|---|---|
| *Name* | : | *Nallamani* |
| *Father's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 23.01.2023*

**வா.சா.3 முதல் விசாரணை:-**

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் ஆவண எழுத்தராக சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30 வருடமாக பணியாற்றி வருகிறேன். என்னுடைய ஆவண எழுத்தருக்கான உரிமம் எண்.B43/1997. என்னுடைய ஆதார் அடையாள அட்டை அசலை கொண்டு வந்துள்ளேன். நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் வாதி பிரதிவாதி வசுமதியுடன் என்ன ஆவணம் செய்து கொண்டார் என்றால் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரம்தானா என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் ஆவண எழுத்தராக யாருடைய பெயர் உள்ளது என்றால் என்னுடைய பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஆவண எழுத்தர் என்று போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான். கிரைய ஒப்பந்த பத்திரத்தை எழுதும்படி என்னிடம் வந்து வாதியும், பிரதிவாதியின் கணவர் மருதசுரேசும் கேட்டனர். மேற்படி பத்திர பதிவு தேதி 18.03.2019ல் ஏற்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதற்கு முதல் நாள் கிரைய ஒப்பந்த பத்திரத்தை எழுதும்படி கேட்டனர். சொத்து சம்மந்தமாக கிரைய ஒப்பந்த பத்திரத்தை எழுதுவதற்கு முன்பாக என்னென்ன ஆவணங்கள் பார்வையிட்டேன் என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. இந்த கிரைய ஒப்பந்த பத்திரம் சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. கிரைய

ஒப்பந்த பத்திரத்தில் சாட்சிகளாக இரண்டு பேர் சாட்சிகளாக கையெழுத்து போட்டுள்ளனர். அவர்கள் ராமசந்திரன் மற்றும் மருத சுரேஷ்.

**குறுக்கு விசாரணை:-**

வாதி பிரபாகரனை எனக்கு சுமார் 2 வருடமாக கிரைய ஒப்பந்த பத்திரம் போடுவதற்கு முன்பாக தெரியும். வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்று எனக்குத் தெரியாது. யார் மூலமாக வாதியை எனக்கு தெரியும் என்றால் நேரடியாகத் தொடர்பு கொண்டார். மருதசுரேசை கிரைய ஒப்பந்த பத்திரம் போட்ட 08.03.2019 அன்றுதான் தெரியும். வாதிதான் என்னை கிரைய ஒப்பந்த பத்திரம் தயார் செய்ய சொன்னார். பிரதிவாதி-வசுமதி என்ன தொழில் செய்து வருகிறார் என்று தெரியாது. அவரை பத்திரம் பதிவு செய்த அன்றுதான் பார்த்தேன். மேற்படி சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு பேசப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. அவர்களாக பேசிக்கொண்டார்கள். கிரைய ஒப்பந்த தொகை என்னுடைய அலுவலகத்தில் வைத்து பரிமாற்றம் செய்யப்படவில்லை. அது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது.

வாதி எவ்வளவு கிரைய ஒப்பந்தம் பேசினார் என்று சொன்னரா என்றால் ரூ.7,03,500/- என்று பேசினார். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்ட ராமசந்திரனை 2வருடங்களுக்கு முன்பாக எனக்குத் தெரியும். மேற்படி ராமசந்திரனும், பிரபாகரனும் உறவினர்கள் என்று எனக்குத் தெரியாது. பிரதிவாதி சொத்தை பதிந்து கொடுக்க சம்மதம் என்று என்னுடைய அலுவலகத்தில் வந்து சொல்லவில்லை என்றால் சரியல்ல, அலுவலகத்தில் வந்து சொன்னார், என்னுடைய அலுவலகத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டார். என்னுடைய அலுவலக முகவரி ஒருங்கிணைந்த பத்திர பதிவு அலுவலகம், தேவி காம்ப்ளக்சில் உள்ளது. எத்தனை மணிக்கு, யார்யார் என்னுடைய அலுவலகத்திற்கு வந்தார்கள் என்றால் பிரதிவாதியும், அவருடைய கணவரும், வாதி, ராமசந்திரன் ஆகியோர் வந்திருந்தனர், நேரம் எனக்கு ஞாபகமில்லை. தற்போது என்னுடைய அலுவலகம் செட்டிகுளத்தில் உள்ளது. பிரபாகரனுக்கு இதே சொத்தை பொறுத்து ஒரு கடனுறுதி பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு ஒரு வருட கால அவகாசம் எதற்கு என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. ராமசந்திரன்தான் பிரபாகரனை என்னுடைய அலுவலகத்திற்கு அழைத்து வந்தார் என்றால் பிரபாகரனே நேரில் வந்தார். சார்பதிவாளர் அலுவலகத்தில் பணம் எதுவும் கொடுத்தார்களா என்றால் அங்கு வைத்து கொடுக்கப்படவில்லை. பிரபாகரன் வட்டி தொழில் செய்து வருகிறார் என்றும், அவர் கடன் கொடுக்கும் நபர்களுக்கு தொடர்ச்சியாக நான்

ஆவணம் எழுதி கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. நான் முறையற்ற வகையில் சொத்து மதிப்பு ரூ.40லட்சம் உள்ள சொத்தை மிக குறைந்த தொகைக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தரப்பினர்கள் சொல்லும் தொகைக்குத்தான் பத்திரம் போடுவோம். கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பாக அரசு வழிகாட்டு மதிப்பு மற்றும் சந்தை மதிப்பை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சந்தை மதிப்பை பற்றி தெரியாது. அரசு வழிகாட்டு மதிப்பு பற்றி தெரிந்து கொண்டேன். கிரைய ஒப்பந்த பத்திரம் போடுவதற்கு முன்பாக பிரபாகரனுக்கு வில்லங்க சான்று போட்டு கொடுத்தேன் என்றால் இல்லை. அவராக கொண்டு வந்திருந்தார். கடனுக்காக ரேகிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்